இணைப்பு I

[535ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினு 66-ன் விடையைக் காண்க.]

1961-ம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூர் நூற்றுண்டு விழாவை ஒட்டி மைய அரசு மாநிலங்களில் ரவீந்திரர் கலை அரங்கு கட்ட ஒரு திட்டம் தயாரித்து அக்கலையரங்கை கட்ட ரூ. 2.75 லட்சம் மான்யமளிக்கவும் முன்வந்தது. இத்திட்டத்தை ஏற்று இவ்வாசு சென்னையில் ரவீந்திரர் கலையரங்கு ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்து, அதற்காக சென்னை நுங்கம்பாக்கம், கிரீம்ரோடு, சுமார் 64 கிரௌண்ட் நிலம் ஒதுக்கிடு செய்தது. மேலும் அரங்கத்தை கட்டுவதற்கான வரைபடங்கள் மதிப்பீடுகளையும் தயார் செய்து ஒப்புதல் பெற்றது. அதனடிப்படையில் அரங்கத்திற்கான அஸ்திவாரமும் சில கட்டிடப் பகுதிகளும் கட்டி முடிக்கப்பட்டது. மைய அரசும் தனது மான்யமாக ரூ. 3.50 லட்சம் அளித்தது. ஆனல் விலைவாசி ஏற்றத்தின் காரணத்தால் இவ்வரங்கை கட்டி முடிப்பதற்கு அதிகச் செலவாகும் என்பதாலும் அரசின் நிதி நிலைமை உத்தேசித்தும், அச்சமயம் பாரதியார் நினைவுச் சங்கம் தாங்கள் அரங்கம் ஒன்று கட்டுவதற்குத் தேவையான நிலத்தை ஒதுக்குமாறு அரசை வேண்டினர். இந்த வேண்டுகோளை பரிசீலித்து புதிதாக பாரதியார் கலை அரங்கிற்கு நிலம் அளிப்பதற்குப் பதிலாக ஏற்கனவே ரவீந்தரர் கலை அரங்கம் கட்டும் இடத்தையும் கட்டிடத்தையும் பாரதி நினைவுச் சங்கத்திற்கு அளித்து அரங்கை கட்டி முடிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என முடிவெடுத்தது. இதற்கிணங்க ரவீந்திரர் அரங்கை கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட 64 கிரௌண்ட் நிலத்தையும் அதிலுள்ள கட்டிடத்தையும் பாரதியார் நினைவு மன்றத்திற்கு அரசு அளித்து விட்டது. இதனை ரவீந்திரர் கூடமென்றும், பாரதியார் அரங்கு என்றும் அழைக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டது.

இணைப்பு II

[515ம் பக்கத்திலுள்ள வெள்ளிக்குறியிட்ட வினு 76-ன் விடையைக காண்க.]

மத்திய தொழில் சிவில் சப்ளை மந்திரியால் 6—11—1974 அன்று புதுடில்லியில் கூட்டப்பட்ட மாநில தொழில் துறை மந்திரிகளின் மாநாட்டில் இவ்வரசின் சார்பில் அப்போதிருந்த தொழில்துறை அமைச்சர் கலந்துகொண்டார். இருப்பினும், பொதுவாக தொழில் வளர்ச்சி பற்றிய பிரச்சினைகள்